[1980 பிப்ரவரி 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இப்படி எழுந்து, இந்தப் பிரச்னையைப் பற்றி பேசக்கூடாது. இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. உட்காருங்கள். தாங்கள் கொடுத்தவைகள் என்னுடைய ஆய்வில் இருக்கின்றபோது, அதைப்பற்றி இங்கே பேசக் கூடாது; எழுப்பவும் கூடாது. உட்காருங்கள். திரு. உமாநாத் அவர்கள்.

[முற்பகல் 10·20]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்லுகிறபோது தாங்கள் ஒரு ரூலிங் கொடுத்தீர்கள். சேம்பரில் ரிஜக்ட் பண்ணியதைப் பற்றி இங்கே கேட்கக் கூடாது என்று சொன்னீர்கள். அப்படியானால் சேம்பருக்கு வந்து மறுபடியும் கேட்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையில் அனுமதி மறுக்கப் பட்டதை இந்த அவையில் விவாதப் பொருளாக ஆக்கக்கூடாது. வேண்டுமானால் மறுபடியும் அறையில் வந்து கேட்கலாம்.

(ஈ) அமைச்சர் திரு. பெ. சௌந்தரபாண்டியனின் பதவி விலகல் செய்தி குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ராஜிநாமா செய்திருப்பதாகவும், அதைக் கவர்னர் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அமைச்சர் வரிசையில் அவருடைய பெயர் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு இதுவரை தகவல் கிடைக்க வில்லையா அல்லது பத்திரிகையில் வந்த செய்தி தவறானதா ? அவருடைய ராஜிநாமா ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி பேரவையில் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற பேரவாவோடு கேட்டிருக் கிறீர்கள். பேரவைத் தலைவருக்கு அதைப் பற்றிய விவரம் எந்த வடிவிலும் வரவில்லை. நீங்கள் பத்திரிகையில் பார்த்திருக்க லாம். வேறுவிதமாக செய்திகள் வந்திருக்கலாம். பேரவைத் தலைவர் என்ற முறையில் அவரிடமிருந்து எந்தவித அறிக்கையோ அல்லது கடிதமோ எனக்கு வரவில்லை. அவர் இருக்கிறபோது இந்தப் பிரச்னையை எழுப்பினால் தகுந்த பதில் கிடைக்கும்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் சொல்வது நடைமுறை தவறாக இருப்பதால் இடையில் குறுக்கிட்டுச் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். ராஜிநாமா செய்துவிட்ட பின்னால் அவர் தங்களுக்குத் தெரிவிக்க மாட்டார். முதலமைச்சராக இருப்பவர்தான் ராஜிநாமாவை ஏற்றுக் கொண்டவுடன் தங்களுக்குத் தெரிவித்து அதன்மூலம் அந்த வரிசையில் இருக்கும் பெயரை எடுக்கச் சொல்ல வேண்டுமே தவிர, சம்பந்தப்பட்டவர் எழுத வேண்டுமென்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் சொல்வதை புரிந்துகொள்கிறேன். எனக்கு ஜி.ஓ. வரும். அது இன்னும் வரவில்லை.

திரு. க. அன்பழகன் : அது இந்த அரசாங்கத்திலிருந்து வந்து சேர ஓராண்டுக்காலம் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேறு பக்கம் திருப்பி விடுகிறீர்கள். அதற்கு நான் பொறுப்பு அல்ல. ஜி.ஓ. எனக்கு இன்னும் வரவில்லை.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அரசு நடவடிக்கைகளில் குற்றம் கண்டுபிடிப்பது பேராசிரியருக்கு கை வந்த கலையாக இருக்கலாம். ஒரு அமைச்சர் ராஜிநாமா செய்தால் ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்படும். முதலமைச்சர் ராஜிநாமாவை ஏற்றுக்கொள்ளலாம் என்று ஆளுநருக்கு பரிந்துரை செய்யலாம். ஆளுநர் அலுவலகத்திலிருந்து அதைப் பற்றிய தகவல வரவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆளுநர் ஏற்றுக்கொண்டு பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே எனக்குத் தகவல் கிடையாது. தயவுசெய்து அமருங்கள்.

4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்கு திருத்தங்கள் கொடுத்துள்ளவர்கள் முதலில் இன்று அவற்றை மொழிவார்கள். திரு. சொரணம்.